# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnercmail@gmail.com Web site : www. tneo.gov.in

**<u>முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்</u>**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 38/2016</u>**

திரு. நாகராஜன், K.A.,
15C/5 லட்சுமி கிரகா அப்பார்ட்மெண்ட்,
B பிளாக், யோகம் கார்டன்,
பிருந்தாவன் நகர் எக்ஸ்டன்ஸன் 2 வது தெரு,
வளசரவாக்கம்,
சென்னை – 600 087. மேல் முறையீட்டாளர்
(திரு. K.A. நாகராஜன் & திரு. P. அரவிந்த் வழக்கறிஞர்)

எதிர்

செயற் பொறியாளர் / இ.ப.,
கே.கே. நகர்,
சென்னை மின்பகிர்மான வட்டம் / தெற்கு,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 கே.வ துணை மின் நிலையம்,
கே.கே.நகர், சென்னை – 600 078 எதிர்மனுதாரர்
(திரு. S. புருசோத்தமன்/உதவி செயற் பொறியாளர்)

**<u>கேட்புரை நாள்: 21–7–2017 மற்றும் 16.8.2016</u>**

**<u>ஆணை நாள் : 30–1–2017</u>**

திரு. K.A. நாகராஜன், வளசரவாக்கம், சென்னை–87 அவர்களின் 25–4–2016 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண் 38/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் மீது மின்குறை தீர்ப்பாளரின் கேட்புரை 21–7–2016 மற்றும் 16.8.2016 ஆகிய நாட்களில் நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர் மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள், மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து, மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :

அவர் அக்டோபர் மாதம் கட்டிய பில் தொகை ரூ.13218/– அடுத்த முறை டிசம்பர் மாதம் கட்டிய பில் தொகை ரூ.3582/– அவரது பெயரில் E.B. டெபாசிட்டாக வைத்துக் கொண்டு இனிவரும் மாதங்களுக்கொருமுறை வரும் பில் தொகையில்கழித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

**2. வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளர் அவருடைய வீட்டில் மின் இணைப்பு எண் 287–112–566ஐ பயன்படுத்தி வருகின்றார். அந்த மின் இணைப்பு எதிர்மனுதாரரின் ஆளுகைக்கு உட்பட்டது ஆகும்.

2.2 10/2015 கணக்கீடு காலத்திற்கான மின்பயன்பாட்டளவு 2180 யூனிட்கள் என்றும் மின்கட்டணம் ரூ.13218/– என்றும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர் மேற்கண்ட மின் கட்டணம் அதிகம் என்று மீட்டரை மாற்ற வேண்டும் என்று உதவி பொறியாளரிடம் கடிதம் கொடுத்துள்ளார். மின் கட்டணத்தையும் செலுத்தியுள்ளார்.

2.3 12/2015 கணக்கீடு காலத்திற்கும் மின்பயன்பாட்டளவு 720 யூனிட் என்றும் மின்கட்டணம் ரூ.3582/– என்றும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.4 மேல்முறையீட்டாளர், மேற்கண்ட காலங்களுக்கான மின்கட்டணம், மிகவும் அதிகமாக உள்ளது என்றும், அவரின் சராசரி பயன்பாட்டளவைவிட அதிகமாக உள்ளது என்று மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார்.

2.5 மன்றம் மின் அளவி பழுது அல்ல எனவே மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்துள்ளது. மேற்கண்ட தீர்வில் அதிப்தியுற்ற மேல்முறையீட்டாளர், இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறை தீர்ப்பாளர் முன்பாக சமர்பித்துள்ளார்.

3. <u>மன்றத்தின் தீர்வு</u>

சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்குவின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வு, 4.4.2016 நாளிட்ட ஆணையில் வழங்கப்பட்டுள்ளது. அந்த தீர்வின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>Findings and Order of the Forum</u>*
*The meter is not defective the request of the petition is not feasible of compliance"*

4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் :–</u>

4.1 நானும் எனது குடும்பத்தாரும் மின்சாரத்தை மிகவும் சிக்கனமாக பயன்படுத்தி வருகிறோம், இரவு நேரங்களில் உதாரணமாக சமையல் கட்டில் சமையல் வேலை இருந்தால் சமையல் கட்டில் மட்டும் ஒரே ஒரு LED பல்பை பயன்படுத்திக் கொண்டு மற்ற ரூம்களில் இருக்கும் ஃபேன் மற்றும் டியூப் லைட்களை அனைத்து வைத்து மின்சாரத்தை மிகவும் சிக்கனமாக பயன்படுத்தி வருகிறோம்.

4.2 இந்த நிலையில், 28–10–2015 கணக்கீட்டின்படி, 2180 யூனிட் உபயோகப்படுத்தியதற்காக ரூ.13218/– ரூபாய் கட்டசொல்லி மறு நாள் குறுஞ் செய்தியை பார்த்தவுடன் அதிர்ச்சி அடைந்தேன்.

4.3 சரியாக ரீடிங் எடுக்கவில்லை, ரீடிங் எடுப்பதில், பக்கத்து பிளாட்டில் வசிக்கும் N. நாகராஜன் சர்வீஸ் நெ. 287–112–565, மாற்றி, எனக்கு ரீடிங் தவறாக குறித்து விட்டார்கள், எனக்கு ரீடிங் தொகை ரூ.1328/– என்று நினைத்துக் கொண்டு, அந்தத் தொகையே அதிகம் எப்பொழுதும் எனக்கு இரண்டு மாதங்களுக்கு ரூ.345, ரூ.610, ரூ.730, ரூ.760, ரூ.850 அதற்குள்தான் வரும், என்று நினைத்துக் கொண்டு, ஆழ்வார்திருநகர் AE சிவராஜ் அவர்களிடம் மீட்டர் சரியில்லை மாற்றி தருமாறு கடிதம் கொடுத்தேன். அவரும் கடிதத்தை பெற்றுக்கொண்டு அதற்கு ஆவன செய்வதாக கூறினார்.

4.4 இந்த நிலையில், 8 நாட்கள், கழித்து, EB அலுவலகத்தில், இருந்து, இரண்டு பேர் வந்தார்கள், என்னுடைய EB சர்வீஸ் மீட்டரை கழற்றி, எடுத்து சென்று விட்டார்கள்.

4.5 நான் EB அட்டையை கொடுத்து மீட்டரை கழட்டியதை என்ட்ரி செய்ய, சொன்னேன் அதற்கு, அவர்கள், அதெல்லாம் தேவையில்லை, என்று, சொல்லிவிட்டார்கள் பிறகு இரண்டு நாள் கழித்து மீட்டரை மாட்டி சென்றார்கள். அப்பொழுதும் EB அட்டையில் எண்ட்ரி, செய்ய சொன்னேன், அப்பொழுதும் தேவை இல்லை என்று சொல்லி சென்று விட்டார்கள்.

4.6 நவம்பர் 16–11–2015 கடைசி நாள், பணம் கட்ட வேண்டுமே என்று மறுபடியும், கொட்டும் மழையில், AE பார்க்க சென்றேன், அவர்கள் கண்டிப்பாக ரூ.13,218 கட்ட வேண்டும், கட்ட தவறினால் பீஸ்கேரியரை பிடுங்கி விடுவேன் என்று பயமுறுத்தினார்.

4.7 தமிழ்நாடு அரசு மழையின் காரணமாக, சென்னை காஞ்சிபுரம் திருவள்ளூர் மாவட்டத்தை சார்ந்த மின் நுகர்வோருக்கு மழை வெள்ளத்தின் பாதிப்பினால், ஜனவரி 31, 2016 வரை மின்கட்டணத்தை அபராதம் இல்லாமல் கட்டலாம் என்பதை AE அவர்களிடம் எடுத்து கூறியும் 30–11–2015 விடாப்பிடியாக என்னை, மறுநாள் 1–12–2016 அன்று பீஸ், கேரியரை, எடுத்து விடுவேன் என்று பயமுறுத்தி, என்னை மிகவும் சிரமத்திற்கு ஆளாக்கி, மனஉளைச்சல், ஏற்பட்டு, எனது நண்பர்களிடம் சொல்லி அழுதேன், அவர்களில் ஒருவர், நல்ல மனம் கொண்ட ஒருவர், எனது பெயரில் இருக்கும் EB பில்லை, DD எடுத்து கட்டி ஆறுதல் கூறினார்.

4.8 தமிழ்நாடு அரசு அறிவித்த சலுகை காலத்தை மதிக்காமல், என்னை அதிகப்படியான தொகையை கட்ட சொன்னது. தமிழ்நாடு அரசு சொன்ன சலுகை ஒரு சம்மந்தப்பட்ட AE அவர்களுக்கு தெரியாமல் இருந்தது. அல்லது, வேண்டுமென்றே என்னை பழி வாங்க செய்தாரா எனக்கு தெரியாது.

4.9 அடுத்த இரண்டு மாதங்களுக்கு பில் வருகிறது (டிசம்பர் 2015) 31–12–2015 720 யூனிட் ஓடியதாகவும் அதற்கு ரூ.3582 கட்ட சொல்லி பில் வருகிறது. இரண்டு பில் தொகைக்கு உண்டான, வித்தியாசத்தை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள். அடுத்த பில்லை, கட்ட கூடாது என்றும் எனக்கு நியாயம் கிடைக்காதவரை பில் தொகையை கட்ட மாட்டேன் என்று மின்குறைதீர்ப்பாளர் அவர்களுக்கு கடிதம் எழுதி, பதிலுக்காக காத்திருந்தேன் அதற்குள்

அடுத்த இரண்டு மாதம் பில் பிப்ரவரி பில் தொகை 230 யூனிட் ஓடியதாகவும் 29–2–2016 ரூ.520 கட்ட சொல்லியும் வந்துள்ளது.

4.10 மேற்கண்ட அக்டோபர் 2015, டிசம்பர் 2015, பிப்ரவரி 2016, மூன்று முறை ஓடிய யூனிட்டையும் தொகையை, நீங்களே பார்த்து எனக்கு ஒரு நல்ல ஒரு பதிலை தருவீர்கள் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறேன்.

4.11 19–3–2016 அன்று நான் ஆழ்வார் திருநகர் EB ஆபீஸ் சென்று, நான் எவ்வளவு தொகை, கட்ட வேண்டும் என்று விசாரித்துவிட்டு, EB பில்லை பேலன்ஸ் இல்லாமல் கட்டி வரலாம் என்று, பணம் கட்ட EB ஆபிஸ் சென்றேன் அவர்கள் ரூ.4246 கட்ட வேண்டும், என்று சொன்னார்கள் அந்த தொகை குறைவாக என்னிடம் இருந்த காரணத்தால் அன்று மதியம் 2.30 மணி ஆகி விட்டதால் என்னால் அன்று EB பில்லை கட்ட முடியவில்லை.

4.12 19–3–2016 அன்று மாலை, 4.45 மணிக்கு AE அவர்கள் அனுப்பிய EB ஊழியர்கள் இருவர் வந்து வீட்டிலும் தகவல், தராமல் எனது மகன் S.S.L.C பரீட்சைக்கு படித்துக் கொண்டு இருக்கும் பொழுது, யாருக்கும் தெரியாமல், பீஸ் கேரியரை எடுத்து சென்று விட்டார்கள்.

4.13 AE அவர்களை சந்தித்து எனது மகன் S.S.L.C. பரீட்சைக்கு படித்து கொண்டு இருக்கிறான், பீஸ் கேரியரை கொடுக்கும்படி கெஞ்சினேன் அவர், அதற்கு சம்மதிக்கவில்லை, பணத்தை கட்டிவிட்டு, பீஸ் கேரியரை வாங்கி கொள் என்று மனசாட்சி இல்லாமல் சொல்லிவிட்டார்.

4.14 எனது மனைவி போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில், இருந்து வளசரவாக்கம் இன்ஸ்பெக்டருக்கு தகவல், கொடுத்து செல்வம் என்ற கான்ஸ்டபிளை எனது வீட்டுக்கு அனுப்பி வைத்து விசாரித்து AE யிடம் பேசி எனக்கு 19–3–2016 அன்று இரவு அவர்மூலம், 10.30 மணிக்கு கரண்ட கிடைக்கச் செய்தார்.

4.15 21–3–2016 அன்று வரை மின் கட்டணம் கட்ட நேரம் இருக்கும் பொழுது 19–3–2016 சனிக்கிழமை மாலை 4.45 மணிக்கு எனது பீஸ் கேரியரை எடுத்து செல்லாமல் கொள்ளாமல் சென்றதன் காரணம் என்ன?

4.16 அக்டோபர் மாதம் பில் தொகை வழக்கத்தை விட அதிகம் வந்தால், யாரும் கேள்வி கேட்க மாட்டார்களா?

4.17 மீட்டரை கழட்டி, செல்லும் பொழுதும், மாட்டும் பொழுதும் EB ரீடிங் அட்டையில் குறித்து செல்லமாட்டார்களா?

4.18 எங்களது, B பிளாக் பிளாட்ஸ்களில் இருக்கும் மீட்டர், ரீடிங், கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | 287–112–564 | நாகராஜன் K.A. | A/C இல்லை | 2180 யூனிட் | ரூ. 13218 |
| 2) | 287–112–554 | சினேகமித்ரா | A/C இல்லை | 150 யூனிட் | ரூ. 245 |
| 3) | 287–112–560 | T. பிரதாப் | A/C உண்டு | 790 யூனிட் | ரூ. 4044 |
| 4) | 287–112–562 | சுரேஷ் சௌத்திரி | A/C உண்டு | | |
| 5) | 287–112–565 | K. N. நாகராஜன் | A/C உண்டு | 797 யூனிட் | ரூ. 1083 |
| 6) | 287–112–561 | பிரபு வெங்கடேஷ் | A/C உண்டு | | |
| 7) | 287–112–563A | சர்மிளா | A/C உண்டு | | ரூ. 7344 |
| 8) | 287–112–559 | லஷ்மணசாமி | A/C உண்டு | | ரூ. 2262 |
| 9) | 287–112–546 | பொது தண்ணீர் மோட்டர் லஷ்மி கிரஹா அப்பார்ட்மென்ட் | 16 பிளாட்ஸ்க்கும் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கும் | | ரூ. 2526 |

4.19 நான் A/C பயன்படுத்தவில்லை, A/C பயன்படுத்துபவருக்கு குறைவான பில் தொகையும் A/C பயன்படுத்தாத எனக்கு 2180 யூனிட்டும் ரூ.13,218 பில், எப்படி வரும் தெரியப்படுத்தவும்.

**5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:-</u>**

5.1 திரு. நாகராஜன் K.A. 15C/5, லட்சுமி கிரகா அப்பார்ட்மெண்ட் B பிளாக் போகம் கார்டன், பிருந்தாவன் நகர், எக்ஸ்டன்ஸன் 2 வது தெரு வளசரவாக்கம், சென்னை – 600 087 அவர்கள் 28.10.2015 அன்று அவரது மின் இணைப்பு எண்.287–112–564–ல் கணக்கீடு செய்யப்பட்டு உபயோகம் 2180 யூனிட் மற்றும் அதற்கான தொகை ரூ.13218/– யை குறுஞ்செய்தி பார்த்து அதிர்ச்சி அடைந்ததாக கூறியுள்ளார். மேலும் பக்கத்து பிளாட்டில் வசிக்கும் கே.என் நாகராஜன்

மின் இணைப்பு எண் 287–112–565 மாற்றி தவறுதலாக குறித்து விட்டதாக கூறிய குற்றச்சாட்டு உண்மையல்ல. அவருடைய மின் அளவியில் வரும் பயனீட்டு அளவும் திரு. கே.என் நாகராஜன் அவர்களின் பயனீட்டு அளவுக்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை. மனுதாரரின் கடிதத்தின் பேரில் மின் அளவியை நேரில் பார்த்து உதவி பொறியாளர்/ ஆழ்வார் திருநகர் பரிசோதனை கூட்டத்திற்கு அந்த மின் அளவியை ஆய்விற்காக அனுப்பினார்.

5.2 மனுதாரர் கூற்றுபடி 10.2015க்கான காலகட்டத்தில் சென்னையில் மழை பெய்யவில்லை என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு தெரியப்படுத்தப்படுகிறது. மின் அளவியினை பரிசோதனை கூடத்திற்கு மனுதாரர் கடிதத்தின் பேரில் அன்றைய தினமே மின் அளவியை கழற்றி அன்று மாலையில் மனுதாரரின் முன்னிலையில் பொருத்தப்பட்டது. பரிசோதனை கூட ஆய்வறிக்கையின் பேரில் மின் அளவி (Found in Order) நன்றாக உள்ளது என Lr. No. AEE/ MRT/Metering/S/F/d.785/15, dt.06.11.2015. மூலம் தெரிவிக்கப்பட்டது .

5.3 மேலும் 11/2015 மற்றும் 12/2015 க்கான சென்னை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மின் நுகர்வோருக்கு மட்டுமே தமிழ்நாடு அரசு 31.01.2016 வரை அபராதமின்றி வசூல் செய்யலாம் என்ற சலுகை அறிவிக்கப்பட்டது.

5.4 மனுதாரரின் மின் அளவி பரிசோதனைக்கூட ஆய்வறிக்கை பெற்ற பின்னர் அதே மின் அளவியினை மீண்டும் மனுதாரரின் முன்னிலையிலேயே பொருத்தப்பட்டது மின் இணைப்பு எண் 287–112–564). மனுதாரர் உபயோகப்படுத்திய 12/2015 மின் கணக்கீடு 31.12.2015 அன்று பதிவு செய்யப்பட்டது. அதனுடைய கால அவகாசம் 31.01.2016 வரை தமிழக அரசால் நீட்டிக்கப்பட்டது.

5.5 12/2015 க்கான மின்கட்டணம் ரூ.3582 செலுத்தாததால் 19.03.2016 அன்று மின் துண்டிப்பு செய்யப்பட்டது. 10/2015 க்கான மின்கட்டணம் தொடர்பாக மனுதாரருக்கு முன்னரே தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகையினால் 10/2015 க்காக மின் துண்டிப்பு செய்யப்படவில்லை.

5.6 மனுதாரரின் மின் அளவியினை அவரிடம் தெரிவித்துவிட்டு ஆய்விற்கு எடுத்து சென்று அன்றைய தினமே மின் அளவி பொருத்தப்பட்டதால் மின்கட்டண அட்டையில் குறிப்பிட

வேண்டிய நிர்பந்தம் இல்லை. மேலும் 02/2016 க்கான கணக்கீடு 29.02.2016 அன்று பதிவு செய்யப்பட்டது. அதற்கான கடைசி நாள் 19.03.2016. 12/02015 க்கான மின் கட்டணம் செலுத்தாததால் தான் 19.03.2016 அன்று மின் துண்டிப்பு செய்யப்பட்டது. 02/2016 க்கான கட்டணத்திற்காக மின் இணைப்பு துண்டிக்கப்படவில்லை.

6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

6.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரர்களும், தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 21–7–2016 மற்றும் 16–8–2016 ஆகிய நாட்களில் மின் குறைதீர்ப்பாளரின் முன்பாக கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் திரு. K.A. நாகராஜன் அவர்களும் திரு. P. அரவிந்த் வழக்கறிஞர் அவர்களும் 21–7–2016ல் நடந்த கேட்புரையில் கலந்து கொண்டு மேல்முறையீட்டாளரின் தரப்பு வாதத்தை எடுத்துரைத்தனர். 16–8–2016 அன்று திரு.K.A. நாகராஜன் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு.S. புருசோத்தமன் உதவி செயற் பொறியாளர் இரு நாட்களிலும் கலந்து கொண்டு தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

7. <u>மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 மேல்முறையீட்டாளரின் சார்பில் கேட்புரையில் கலந்துகொண்ட திரு. P. அரவிந்த் வழக்கறிஞர் அவர்கள் மேல்முறையீட்டாளருடைய மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 10/2015 மின்கணக்கீடு காலத்தில் பதிவாகியுள்ள மின்பயன்பாடு 2180 யூனிட்கள் என்பது மிகவும் அதிகம், அது தவறானது என்றும், அடுத்த கணக்கீடு காலமான 12/2015ல் பயன்பாடு 720 யூனிட்கள் என்பதுவும் தவறு என்றும் வாதிட்டார். மேலும், அவருடைய பயன்பாடு 350 யூனிட்களுக்குள் தான் இருக்கும் என்பதையும் தெரிவித்து, மற்றைய காலங்களில் அவ்வாறுதான் உள்ளது என்பதையும் சுட்டிகாட்டி வாதிட்டார்.

7.3 மேலும், அந்த வளாகத்தில் நாகராஜன் என்ற பெயரில் வேறு ஒரு மின் இணைப்பும் உள்ளது. அந்த இணைப்பில் A/C உள்ளது எனவே, பயன்பாட்டளவு மாறி உள்ளதா என்பதையும் ஆராய வேண்டும் என்றும் வாதிட்டார்.

7.4 தன்னுடைய வீட்டில் A/C unit எதுவும் இல்லை என்றும் அதில் மிகவும் குறைவான மின்பளுதான் இணைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மின்சாரத்தை மிகவும் சிக்கனமாகத்தான் பயன்படுத்தி வந்ததாகவும் வாதிட்டு, எனவே, 2180 யூனிட்டுகள் என்று 10/2015 கணக்கீடு காலத்தில் பயன்பாடு இருக்க முடியாது என்றும் வாதிட்டார்.

8. <u>எதிர்மனுதாரரின் பிரதிநிதி கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள் : -</u>

8.1 எதிர்மனுதாரரின் பிரதிநிதி திரு. புருசோத்தமன், உதவி செயற் பொறியாளர், வளசரவாக்கம், அவர்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 உதவி செயற் பொறியாளர் அவர்கள், மேல்முறையீட்டாளரின் வேண்டுகோளின்படி மின் அளவி ஆய்வு செய்யப்பட்டது என்றும், ஆய்வின்படி மின் அளவி பழுது இல்லை என்றும் வாதிட்டார்.

8.3 மேலும், அதே மின் அளவியில் 2/2016 முதல் 6/2016 வரை மின்பயன்பாடு முறையே, 230, 173 மற்றும் 320, என்றுதான் பதிவாகியுள்ளது என்பதை சுட்டிக்காட்டி மின் அளவில் பயன்பாட்டிற்கு தகுந்தாற் போல்தான் பதிவு ஏற்பட்டுள்ளது என்று வாதிட்டார்.

8.4 மேலும், MRT wing மின் அளவியின் இறக்கம் செய்த பதிவுகளை ஆய்வு செய்து மின் அளவி சரியாகத்தான் உள்ளது என்று அறிக்கை சமர்பித்துள்ளது என்பதையும், தெரிவித்தார்.

8.5 மேலும், மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண் 287–112–564ம் திரு. K.N. Nagarajan அவர்களின் மின் இணைப்பு எண் 287–112–565யும் மாறி பதிவு செய்வதற்கு வாய்ப்பு இல்லை என்றும் வாதிட்டார்.

8.6 மின்மாற்றியில் MD 7.9 kw என்று 29.9.2015 ல் பதிவாகியுள்ளதை சுட்டிக்காட்டி அந்த காலத்தில் அதிக மின் சுமை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு :-</u>

9.1 இருதரப்பு வாதங்களையும் கூர்ந்து ஆராய்ந்து பார்க்கும் பொழுது இந்த வழக்கில் கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக எதிர்நின்றன.

(1) மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண் 287–112–564ல் 10/2015 மற்றும் 12/2015ல் பதிவாகியுள்ள மின்பயன்பாடு அதிகம் என்ற மேல்முறையீட்டாளரின் வாதம் சரிதான் ?

(2) மேற்கண்ட மின் இணைப்பில் இணைக்கப்பட்டுள்ள மின்அளவி பழுதா?

(3) மேல்முறையீட்டாளருக்கு ஏதேனும் நிவாரணம் வழங்க முடியுமா?

10. <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு :-</u>

10.1 மேல்முறையீட்டாளர், தன்னுடைய மின் இணைப்பில் 10/2015 மற்றும் 12/2015 ஆகிய கணக்கீடு காலங்களில் பதிவாகியுள்ள பயன்பாடு, அவருடைய மின் இணைப்பில் எப்பொழுதும் உள்ள பயன்பாட்டை விட மிக அதிகம் என்று வாதிட்டார்.

10.2 அவருடைய பொதுவான இரண்டு மாதம் பயன்பாடு, 350 யூனிட்களுக்கு குறைவாகத்தான் இருக்கும் ஆனால் 10/2015 மற்றும் 12/2015 ஆகிய காலங்களில் மின்பயன்பாடு 2180 மற்றும் 720 யூனிட்டுகள் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே இவை அவரின் சாதரணமான பயன்பாட்டைவிட மிகவும் அதிகம் என்று வாதிட்டுள்ளார்.

10.3 எதிர்மனுதாரர், மின் அளவியை ஆய்வு செய்தும், மின்அளவியின் பதிவிறக்கம் பண்ணிய பதிவுகளை ஆராய்ந்தும் MRT பிரிவு, மின் அளவி சரியாகத்தான் இயங்குவதாக தெரிவித்துள்ளது. எனவே, மின்அளவியில் பதிவான பதிவுகள் அந்த கணக்கீடு காலத்தின் பயன்பாடுதான் என்றும் வாதிட்டு உள்ளார்.

10.4 மேல் முறையீட்டாளர் தன்னுடைய மின் இணைப்பில் சாதாரணமாக பதிவு ஆகும் மின்பயன்பாடு 350 யூனிட்களுக்கும் குறைவுதான் எனவே 10/2015 ல் 2180 என்றும், 12/2015 720 யூனிட்கள் பதிவு என்பது தவறு என்று வாதிடுவதால் நான் அந்த மின் இணைப்பின்

முந்தைய காலங்களின் பயன்பாட்டு பதிவை ஆராய விரும்புகிறேன். **2009**லிருந்து **2016** வரையிலான மின்பயன்பாட்டு பதிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 150 | 110 | 210 | 190 | 220 | 300 | 300 | 230 |
| 4 | 250 | 230 | 200 | 230 | 280 | 300 | 330 | 173 |
| 6 | 220 | 280 | 320 | 110 | 290 | 90 | 310 | 320 |
| 8 | 290 | 240 | 300 | 30 | 330 | 0 | 340 | 320 |
| 10 | 200 | 260 | 280 | 510 | 290 | 335 | 2180 | |
| 12 | 200 | 260 | 240 | 190 | 250 | 260 | 720 | |
| Average | 218 | 230 | 258 | 210 | 276 | 214 | 697 | 261 |

**10.5** மேற்கண்ட மின் பயன்பாட்டு பதிவுகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது நாம் அறிவது **10/2015**, மற்றும் **12/2015** கணக்கீடு காலங்களை தவிர்த்து பார்த்தால் **10/2012**ல் **510** யூனிட்கள் மின்பயன்பாடு என்று பதிவாகியுள்ளது. அதை தவிர அதிகமான பயன்பாடு என்பது **330** யூனிட்கள்தான். மேலும் வருட சராசரி பயன்பாடு கீழ்கண்டவாறு உள்ளது.

**2009 – 218**

**2010 – 230**

**2011 – 258**

**2012 – 210**

**2013 – 276**

**2014 – 214**

**2015 – 697**

**2016 – 261**

(upto 8/2016)

**10.6** மேற்கண்ட வருட சராசரி பயன்பாடு **2015**ல் தான் **697** என்று உள்ளது. மற்ற எல்லா வருடங்களில் **210** முதல் **276** தான் உள்ளது. **2015**ல் **10/15** மற்றும், **12/15** மாத பயன்பாட்டை தவிர சராசரி பயன்பாடு எவ்வளவு என்று கணக்கீடு செய்தால் வரும் சராசரி பயன்பாடு **320** யூனிட்கள் ஆகும். ஆனால் **10/2015** ல் உள்ள பயன்பாடு **2180** யூனிட்கள் அதாவது அந்த மின்

இணைப்பின் சாரசரி பயன்பாட்டை போல் 7 மடங்கு, அதேபோல் 12/2015 ல் உள்ள மின்பயன்பாடு 720 யூனிட்கள் அதாவது மற்ற மாதங்களின் சராசரி பயன்பாட்டை போல் இரண்டு மடங்கு ஆகும்.

10.7 எனவே, மேற்கண்ட ஆராய்வின்படி 12/2015 மாத பயன்பாடு மேற்கண்ட மின் இணைப்பின் சராசரி பயன்பாட்டை போல் இரண்டு மடங்கு என்றும் 10/2015 கணக்கீடு கால பயன்பாடு சராசரி பயன்பாட்டை போல் 7 மடங்கு என்றும் தெரிவதால், அந்த 10/2015 மற்றும் 12/2015ல் பதிவாகியுள்ள மின்பயன்பாடு மற்ற கணக்கீடு காலங்களுடன் ஒப்பிடும்பொழுது அதிகம் என்று தீர்வு செய்யப்படுகிறது.

11. <u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு</u>

11.1 மேற்கண்ட மின் இணைப்பில் 10/2015 மற்றும் 12/2015 கணக்கீடு காலத்தின் மின்பயன்பாடு அதிகமாக உள்ளதற்கு காரணம் அந்த மின் இணைப்பில் இணைக்கப்பட்டுள்ள மின் அளவி பழுதாக இருக்க வேண்டும் அல்லது அந்த கணக்கீடு காலங்களில் நுகர்வோரின் உபயோகம் அதிகமாக இருந்திருக்க வேண்டும்.

11.2 மேல்முறையீட்டாளர், மேற்கண்ட மின் இணைப்பிலுள்ள மின் அளவி பழுது, எனவேதான் மின்பயன்பாடு அதிகமாக பதிவு செய்துள்ளது என்று வாதிட்டுள்ளார்.

11.3 மேலும் திரு.K.N. நாகராஜன் என்ற பெயரில் வேறு நுகர்வோரின் மின் இணைப்பு எண் 287–112–565 உள்ளது. அந்த மின் இணைப்பின் பயன்பாடு தவறாக மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் பதிவு செய்யப்பட்டு இருக்கலாம் என்றும் வாதிட்டுள்ளார்.

11.4 மேலும், தன்னுடைய வீட்டிலுள்ள மின்சாதனங்களின் மொத்த பளு குறைவுதான் என்றும், A.C போன்ற மின்சாதனங்கள் இல்லை என்றும் மின்சாதனங்கள் சிக்கனமாகத்தான் பயன்படுத்துவதால் அதிகமான பயன்பாடு பதிவு ஆகமுடியாது எனவே மின் அளவிதான் தவறு என்றும் வாதிட்டார்.

11.5 எதிர் மனுதாரர் திரு. K.N. நாகராஜன் அவர்களின் மின் இணைப்பின் மின்பயன்பாடும், மேல் முறையீட்டாளரின் பயன்பாடும் மாறுவதற்கு வாய்ப்பு இல்லை என்று வாதிட்டுள்ளார்.

**11.6** மேல்முறையீட்டாளரின் கடிதம் கிடைத்த உடன் மின் இணைப்பின் மின் அளவி சுழற்றப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு அன்றே திரும்பவும், மனுதாரரின் முன்னிலையில் பொறுத்தப்பட்டது. ஆய்வின்படி மின் அளவி நல்ல நிலையில் இயங்குவது உறுதி செய்யப்பட்டது. மேலும், உதவி செயற் பொறியாளர் /MRT அவர்கள் பதிவுகளை பதிவு இறக்கம் செய்து மின் அளவி பழுதில்லை என்று **6.11.2015**ல் தெரிவித்துள்ளார் என்பதையும் சுட்டிக்காட்டி வாதிட்டார்.

**11.7** மேலும், பதிவு இறக்கம் செய்யப்பட்ட பதிவின்படி, மேற்கண்ட மின் இணைப்பில் **7.94** kw மின் பளு MD என்று பதிவு ஆகியுள்ளதை சுட்டிக்காட்டி, மின் இணைப்பில் அதிகமான மின் பளு மேற்பட்ட காலங்களில் உபயோகத்தில் இருந்துள்ளது என்றும் வாதிட்டார்.

**11.8** மேலும், மேற்கண்ட மின் அளவியின் பதிவு இறக்கம் செய்யப்பட்ட தகவல்கள் (down loaded data) மற்றும் மின் அளவியையும் மின் அளவியின் உற்பத்தியாளர் ஆய்வு செய்து மின் அளவி மின்பயன்பாட்டை, வரம்பிற்குள் பதிவு செய்கிறது (the meter is recording energy within limits) என்று தெரிவித்துள்ளார்கள். எனவே, மின் அளவியில் பழுதில்லை என்றும் வாதிட்டுள்ளார்.

**11.9** இங்கு, உரிமம்தாரரின் MRT மின் அளவியின் down loaded data ஐ ஆராய்ந்து மின் அளவி பழுதில்லை என்று வாதிட்டுள்ளதால், அந்த MRT Report கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| *From* | *To* |
| *Er. R. Gunasekaran, B.E.,* | *The Assistant Executive Engineer,* |
| *Assistant Executive Engineer* | *O&M Valasaravakkam,* |
| *MRT/Metering/South* | *CEDC/South* |
| *K.K. Nagar, Chennai 78* | *Chennai* |

*Lr.No.AEE/MRT/Metering/S/F.   /D.785/15, dt.6.11.2015*

*Sub : Elecy – CEDC/South – AE/O&M/Alwarthirunagar – L.T. service connections – Meter performance – Report – Reg.*

*Ref : Endt.No. AEE/O&M/VVKM/F.MRT/D.No.671/2015 dt.04.11.15.*

* * * * *

*Based on the request of AEE/O&M/Valasaravakkam and AE/O&M/Alwarthirunagar the details and the status of the meter in the LT service connections are furnsihded below:*

| | | | |
|---|---|---|---|
| *1.* | *LT A/C No.* | *:* | *287-112-564* |
| | *Make* | *:* | *Secure* |
| | *Meter No.* | *:* | *TE 207009* |
| | *Capacity* | *:* | *10-60 Amps* |
| | *P.O. No.* | *:* | *RC.54/17.10.13* |
| | *Reason for meter downloading* | *:* | *High consumption* |

*The meter downloaded data was analyzed and readings are compared with consumer ledger readings the performance of the meter is found in order*

| *As per download data* | | | |
|---|---|---|---|
| *Date* | *Cum kwh* | *Cum kvah* | *MD* |
| *05.11.15* | *4146.70* | *4877.10* | *-* |
| *28.10.15* | *3877.10* | *4581.10* | *-* |
| *27.08.15* | *1716* | *2183.40* | *-* |
| *16.07.15* | *1484.10* | *1861.60* | *1.50* |
| *16.05.15* | *1160.60* | *1437.50* | *1.44* |
| *16.03.15* | *832.30* | *1011.20* | *1.48* |
| *16.01.15* | *546.70* | *659.50* | *1.52* |
| *16.11.14* | *274.20* | *316.40* | *6.90* |

| *As per consumer ledger* | | |
|---|---|---|
| *Date* | *Cum kwh* | *Cum kvah* |
| *-* | *-* | *-* |
| *28.10.15* | *3900* | *0* |
| *27.08.15* | *1720* | *0* |
| *27.06.15* | *1380* | *0* |
| *25.04.15* | *1070* | *0* |
| *23.02.15* | *740* | *0* |
| *22.12.14* | *440* | *0* |
| *24.10.14* | *180* | *0* |

*xxxxx xxxxx xxxxx*
*xxxx xxxxx xxxxxx*

**11.10** மேற்கண்ட AEE/MRT/Metering/South ன் அறிக்கையின்படி, மின் அளவியின் பதிவு இறக்கம் செய்யப்பட்ட பதிவுகள், ஆய்வு செய்யப்பட்டன என்றும், அவற்றை consumer ledgerல் உள்ள பதிவுகளோடு ஒப்பிட்டு பார்த்து மின் அளவியின் செயல்பாடு சரியாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

**11.11** மேலும், பதிவு இறக்கம் செய்யப்பட்ட தினசரி பயன்பாட்டை ஆராயும் பொழுது, **28.8.15** வரை மின் பயன்பாடு சராசரியாக **5** அல்லது **6** யூனிட்கள் தான் உள்ளது. ஆனால் **29.8.2015**ற்கு பிறகு **25** யூனிட்களுக்கு மேல் அதிகமாக சுமார் **51** யூனிட் வரை ஒரு நாள் பயன்பாடு உள்ளது.

**11.12** மேற்கண்ட பயன்பாடு **4.11.2015** வரை இருந்துள்ளது. அதாவது அதிக பயன்பாடு **29.8.2015** முதல் **28.10.2015** வரையிலும் **10/2015** கணக்கீடு காலத்தில் உள்ளது. மேலும் அந்த நிலைமை, **28.10.2015** முதல் **4.11.2015** வரையிலும், **12/2015** கணக்கீடு காலத்தில் இருந்துள்ளது **(4146–3900)** சுமார் **246** யூனிட்கள், **7** நாட்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும் அறிய முடிகிறது. மேலும், **29.9.2015**, மாலை **4** மணி அளவில் மின் பளு **7.94** kw என்றும் பதிவாகியுள்ளது. மேற்கண்ட மின்பளு உபயோகத்திலிருந்தால் ஒரு மணி நேரத்திற்கு சுமார் **8** யூனிட்கள் பதிவாக முடியும் / மேற்கண்ட தகவல்கள், மின் இணைப்பு எண்.**287–112–564**ல், கருத்து வேறுபாடு (disputed period) உள்ள காலத்தில், மின் பளு அதிகமாக உபயோக படுத்தப்பட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளதையும், தினசரி உபயோகமும், அந்த காலங்களில் அதிகமாக இருந்ததையும் உறுதி செய்கின்றன.

**11.13** மேலும், மேற்கண்ட மின் அளவியை, உற்பத்தியாளர் சோதனை செய்து சோதனை முடிவில், மின் அளவி சரியாகத்தான் உள்ளது என்று எதிர்மனுதாரர் வாதிடுவதால், நான் மின் அளவியின் உற்பத்தியாளரின் கடிதத்தை ஆராய விரும்புகிறேன். அந்த **15.12.16** நாளிட்ட secure meter Ltd ன் அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*SECURE*

*SML/CHN/018/2016-17*

*To*
*The Assistant Executive Engineer,*
*MRT/Metering,*
*TANGEDCO*
*Chennai South EDC*
*KK Nagar Chennai*

*Sub : Test report of meter bearing serial no.TE207009- Reg*

*Dear Sir,*
*We write with reference to the above subject and please find the enclosed detailed test report of the meter bearing serial No.TE207009, which was tested on 7.12.2016 at our works.*

*The Test report of the meter found to be that the meter is recording energy within the limits.*

*Thanking you and assuring you of best services al all times.*

*xxxxx xxx xxxxx*
*xxxxx xxxxx xxxx*

11.14 மேற்கண்ட மின் அளவி உற்பத்தியாளரின் அறிக்கையின்படி, மின் அளவி மின்பயன்பாட்டை within limits குள்தான் பதிவு செய்கின்றது என்று, தெரிவித்துள்ளது, எனவே மின் அளவி சரியாகத்தான் வேலை செய்கிறது என்று தெரிகிறது.

11.15 உரிமம்தாரரின் MRT wing, மின் அளவியின், பதிவு இறக்கம் செய்யப்பட்ட பதிவுகளை ஆராய்ந்து மின் அளவி பழுது இல்லை என்று தெரிவித்துள்ளதாலும், மின் அளவியின் உற்பத்தியாளரான, Secure Meter Ltd அவர்களும், பதிவு இறக்கம் செய்யப்பட்ட பதிவுகளை ஆராய்ந்தும், மின் அளவியை பரிசோதனை செய்து, பதிவுகள் வகுக்கப்பட்ட வரையறைக்குள் (within limits) உள்ளன என்று அறிக்கை அளித்திருப்பதாலும், மேலும், அதே மின் அளவியின் 2/2016, 4/2016, 6/2016 ஆகிய காலங்களில் உள்ள பயன்பாடு 230 முதல் 320 யூனிட்கள் என்று குறைந்து காணப்படுவதாலும் மின் பயன்பாடு பதிவு, அந்த காலத்தில் உள்ள பயன்பாட்டின்படிதான் உள்ளது என்பதால் மின் அளவி பழுது இல்லை என்று தீர்வு செய்கிறேன்.

11.16 இருந்தபோதிலும், மேல்முறையீட்டாளர் மேற்கண்ட மின்னளவி பழுது என்று கருதினால் அவர் மின்னளவியின் மீது சிறப்பு சோதனை செய்யும்படி மின்வழங்கல் விதித்தொகுப்பின் விதி 7(9)ன் படி கோரலாம். அந்த விதி 7(9) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**"7. Installation of Meter**

*xxx xxx xxxx*

*xxx xxx xxx*

*(9) If the consumer considers that the meter is defective, he may apply to the Licensee to have a special test carried out on the meters at any time and the cost of such a test shall be borne by the Licensee or the consumer according as the meter is found defective or correct as a result of such a test. The aforementioned special test for the disputed energy meters including the suspected/defective meters shall be carried out in the Third Party testing laboratory accredited by National Accreditation Board for Testing and Calibration Laboratories (NABL) and till such time the Third Party Meter Testing Arrangement is established, the licensee shall have the special test conducted by the Chief Electrical Inspector to Government of Tamil Nadu]. The meter shall be deemed to be correct if the limits of error do not exceed those laid down in the relevant rules made under the Act. The consumer may also be allowed to install a check meter after recalibration by the Licensee.*

*Such check meter shall be of high quality, high precision and high accuracy and sealed by the Licensee. Whenever the Licensee's meter becomes defective the check meter reading may be taken for billing.*

*xxx xxx xxxx*
*xxx xxx xxx "*

11.17 மேற்கண்ட விதியினை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது நுகர்வோர்கள் தன்னுடைய மின் இனைப்பிலுள்ள மின் அளவி பழுதானது என்று கருதினால், மின் அளவியில் சிறப்பு சோதனை செய்ய கோரலாம் என்றும் அவ்வாறு சிறப்பு சோதனையில், மின்அளவி பழுது அல்லது பழுதற்றது என்பதை அறிந்த பின்பு மின்அளவி பழுது என்றால் உரிமம்தாரரும், மின் அளவி சரியாக உள்ளது என்றால் சிறப்பு பரிசோதனைக்கான கட்டணத்தை நுகர்வோரும் ஏற்க வேண்டும் என்று தெரிகிறது. மேலும் மேற்கண்ட சிறப்பு சோதனையானது, சோதனை மற்றும் அளவுக் குறிப்பிடுதலுக்கான தேசிய அங்கீகரிப்பு வாரியத்தால் (NABL) அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினர் சோதனை ஆய்வகத்தில் செய்யப்படுதல் வேண்டும், மற்றும் மூன்றாம் தரப்பினரால் அத்தகைய சோதனை ஆய்வகம் நிறுவப்படும் காலம் வரையில், தமிழ்நாடு அரசின் தலைமை மின் ஆய்வாளரால் நடத்தப்படும் சிறப்பு சோதனையை செய்தல் வேண்டும் என்று தெரிகிறது.

11.18 12.11 மேலும், இது சம்பந்தமாக, ஒழுங்குமுறை ஆணையத்தின் MP 41 of 2003 நாள் 8.9.2009 நாளிட்ட ஆணையில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

*"The challenge test shall be done either at Government Electrical Standards Laboratory (GESL) run by Chief Electrical Inspector to Government of Tamil Nadu or at National Accreditation Board for Testing and Calibration Laboratory (NABL) accredited laboratories and the place of such challenge test shall be left to the discretion of the consumer. The charges for challenge test shall be as per the rates in force at GESL and NABL accredited laboratories.*

*(iv) Charges for the Challenged Test made at Government Electrical Standards Laboratory (GESL) or at National Accreditation Board for Testing and Calibration Laboratory (NABL) shall be as per the rates in force at GESL or NABL, as the case may be, which shall be collected by the licensee from the consumer for whom the said Challenge Test was made."*

**11.19** மேற்கண்ட சிறப்பு சோதனை, தமிழ்நாடு அரசின் தலைமை மின் ஆய்வாளரால் நடத்தப்படும் அரசின் மின்சார தரநிர்ணய சோதனை சாலையில் அல்லது NABL ஆல் அங்கீகரிக்கப்பட்ட சோதனை மற்றும் அளவீடு சோதனை சாலையில் (testing and calibration lab) பண்ணவேண்டும். எந்த இடத்தில் சோதனை செய்யப்பட வேண்டும் என்பதை நுகர்வோரின் முடிவுக்கு விட வேண்டும் என்று தெரிகிறது. மேலும், சிறப்பு சோதனைக்கான கட்டணம், GESL & NABL accredited laboratories நிர்ணயிக்கும்படி இருக்கவேண்டும் என்றும் தெரிகிறது.

**11.20** எனவே, இந்த மேல்முறையீட்டாளர் சிறப்பு சோதனை செய்யவேண்டும் என்று விருப்பம் தெரிவித்தால் மேற்கூறிய பத்திகளில் உள்ளபடி இந்த மேல்முறையீட்டாளருக்கு அவருடைய மின் இணைப்பிலுள்ள மின் அளவியை சிறப்பு பரிசோதனை செய்ய அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனை கூடங்கள் மற்றும், அவற்றில் விதிக்கப்படும் கட்டணம் ஆகியவற்றை தெரிவித்து மேல்முறையீட்டாளருக்கு தெரிவித்து, அவர் தேர்வு செய்யும், பரிசோதனை கூடத்தில் மின் அளவியை சிறப்பு சோதனை செய்ய வேண்டும் என்றும், அந்த சிறப்பு சோதனையின் அறிக்கையின்படி மேல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

**11.21** சிறப்பு சோதனை அறிக்கையில் மின்னளவி பழுது என்று முடிவு செய்யப்பட்டால் **10/2015** மற்றும் **12/2015** ஆகிய காலங்களுக்கு மின்னளவி பழுதான காலங்களுக்கு சராசரி மின்பயன்பாட்டளவு, மின் வழங்கல் வித்தொகுப்பின் விதி **11**ன் படி கணக்கீடு செய்யப்படவேண்டும் என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

**12. <u>வழக்கெழு வினா மூன்றிற்கான தீர்வு :</u>**

12.1 என்னுடைய வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வின்படி, மின் இணைப்பு எண் **287–012–564** ல் உள்ள மின் அளவி பழுதில்லை என்று தீர்வு செய்யப்பட்டுள்ளது.

**12.2** மின்னளவி பழுது இல்லை என்ற நிலையில் அந்த மின் அளவியில் பதிவாகியுள்ள பயன்பாடுகள் அந்த பயன்பாட்டு காலங்களில் மின் இணைப்பில் பயன்படுத்தப்பட்ட உபயோகம்

என்றுதான் எடுத்துக் கொள்ள முடியும். எனவே, இந்த மேல் முறையீட்டாளருக்கு எந்த நிவாரணமும் என்னால் வழங்க முடியவில்லை.

**13. <u>முடிவுரை :-</u>**

13.1 வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வின்படி மேற்கண்ட மின் இணைப்பு எண் 287–112–264ல் உள்ள மின் அளவி பழுதில்லை என்பதால், 10/2015 மற்றும் 12/2015 ஆகிய கணக்கீடு காலங்களில் மேற்கண்ட மின்அளவியில் பதிவான மின் பயன்பாட்டின்படி விதிக்கப்பட்ட மின் கட்டணம் சரிதான் என்று தீர்வு செய்யப்படுகிறது.

13.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.38/2016 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ.தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. நாகராஜன், K.A.,
15C/5 லட்சுமி கிரகா அப்பார்ட்மெண்ட்,
B பிளாக், யோகம் கார்டன்,
பிருந்தாவன் நகர் எக்ஸ்டன்ஸன் 2 வது தெரு,
வளசரவாக்கம்,
சென்னை – 600 087.

2) செயற் பொறியாளர் / இ.ப.,
கே.கே. நகர்,
சென்னை மின்பகிர்மான வட்டம் / தெற்கு,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 கே.வ துணை மின் நிலையம்,
கே.கே.நகர், சென்னை – 600 078.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 கே.வி. துணை மின் நிலையம்,
கே.கே. நகர், சென்னை–600 078.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.